

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிக்க தலைமையில் நிகழ்த்தப்பட்ட "ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி என்ற ஈராண்டு சாதனை மலரை தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வெளியிட்டார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத், மாநகர காவல் ஆணையர் பிரவீன் குமார் அபிநபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சசாங்சாய், திருப்பூர் சார் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய் நாராயணன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி.பல்லவி சர்மா, மாநகர காவல் துணை ஆணையர் அபிஷேக் குப்தா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) வாணி ஆகியோர் உள்ளனர்.



காஞ்சிபுரம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தமிழ்நாடு தங்கும் விடுதி மற்றும் உணவகத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் 21–5–2023 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, மாவட்ட வருவாய் அலுவலர் சிவ ருத்ரய்யா ஆகியோர் உள்ளனர்

பால்வளத் துறைப் பணியாளர்களுக்கு

# பால்வளத் துறை அமைச்சர் மனோ தங்கராஜின் 12 உத்தரவுகள்!

## அனைத்துப் பணியாளர்களும் கட்டாயம் பின்பற்ற அறிவுறுத்தல்!

சென்னை, மே 24 -

22-05- 2023 நந்தனம், ஆவின் இல்லத்தில், பால்வளத்துறை அமைச்சர் த. மனோ தங்கராஜ் கீழ்க்கண்ட 12 உத்தரவுகளை அனைத்து பணியாளர்களும் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பால்வளத்துறை அமைச்சர் த. மனோதங்கராஜ் நிர்வாக சீரமைப்பு குறித்து விரிவாக கீழ்க்கண்ட 12 உத்தரவுகளைப் பிறப்பித்தார்:

1.பால் கொள்முதல் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்களின் சம்பளம் அவரவர் வங்கி கணக்குகள் மூலம் மட்டுமே வழங்க வேண்டும்.

2. பால் பதப்படுத்துதல் பேக்கேஜிங் மற்றும் லோடிங் செய்யும் இடங்களிலும் பிரதான வாயிலிலும் CCTV கண்காணிப்பை மேம்படுத்துதல்.

3. Bio Metric மூலம் பணியாளர்களின் வருகைப் பதிவேடு முறையாகப் பராமரிக்க வேண்டும்.

4.அனைத்து போக்குவரத்து வாகனங்களுக்கும் FC மற்றும் வாகனத்தின் நிலை, சுத்தம் மற்றும் சுகாதாரத்தை உறுதி செய்தல்

5. விவசாயிகளிடமிருந்து பால் கொள்முதல் தொடங்கி BMC மற்றும் மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களுக்கு வந்தடையும் கால இடைவேளையை அதற்கு நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வந்தடைவதை உறுதிப்படுத்த வேண்டும்.

6. கூட்டுறவு பால் கொள்முதல் நிலையங்கள் தனிநபர்களுக்கு பால் விற்பனை செய்வதை நிர்ணயிக்கப்பட்ட 10% அளவிற்கு கட்டுப்படுத்த வேண்டும். முடியாத சூழலில் அவற்றை கூட்டுறவு சங்கக் கணக்குகளில் முறையாகப் பதிவு செய்ய வேண்டும்.

7. தனியார் பால் நிறுவனங்கள் அதிக விலைக்கு பால் கொள்முதல் செய்வதும் அவற்றில் சர்க்கரை, யூரியா, ஸ்டார்ச் உள்ளிட்ட பல்வேறு வேதி பொருட்கள் கலப்படம் செய்து பாதுகாப்பு விதிகளை மீறி உரிய அனுமதியின்றி பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதை தடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களின் உதவியுடன் மாவட்ட உணவுப் பாதுகாப்பு அலுவலர்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

8. பால் பதப்படுத்துதல் மற்றும் கையாளுவதில் வரும் இழப்பைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

9. பால் உற்பத்தியாளர்களுக்கு குறித்த நேரம் தவறாமல் பணம் பட்டுவாடா செய்தல்.

10. ஆவின் அலுவலகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேவையான கணினி மற்றும் ICT பயிற்சிகளை உடனடியாக அளிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

11. ஆவின் பால்பண்ணைகள் மற்றும் பார்லர்களை சுத்தம் மற்றும் சுகாதாரத்துடன் வைத்திருக்க வேண்டும்.

12. கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து BMCகளுக்கு பால் எடுக்கப்படும் பொழுது கொழுப்பு மற்றும் இதர சத்துக்களை அந்த இடத்திலே அளவீடு செய்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

BMC மையங்களில் இருந்து ஒன்றியத்திற்கு பால் எடுக்கப்படும் பொழுது அங்கேயே கொழுப்பு மற்றும் இதர சத்துக்களை அந்தந்த இடத்திலே அளவீடு செய்து எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மனோ தங்கராஜ் தெரிவித்துள்ளார்.

தென்னை விவசாயிகளின் நலன் காக்க

# நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய் வழங்கும் திட்டம்!

## அயலக தமிழர் நலவாரிய தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி அறிக்கை!

சென்னை, மே 24 -

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு, மற்றும் தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிக அளவு தென்னை சாகுபடி நடைபெறுகிறது. இதையுணர்ந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 2006-2011 ஆட்சிக் காலத்தில் தென்னை விவசாயிகளின் நலன் காக்க தென்னை நல வாரியத்தை அமைத்தார்கள்.

2021 ஆம் ஆண்டு மீண்டும் நமது கழக ஆட்சி வந்தவுடன் நமது தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு கழக சுற்றுச்சூழல் அணி சார்பாக தென்னை விவசாயிகளின் நலன் காக்கும் விதமாக நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய் வழங்குமாறு கோரிக்கை வைத்தோம். அதைக் கனிவுடன் பரிசீலித்த முதலமைச்சர் அவர்கள் சோதனை முயற்சியாக 4 மாவட்டங்களில் தேங்காய் எண்ணெய் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

இதை போகப் போக தமிழ்நாடு முழுவதும் விரிவுபடுத்த அரசு திட்ட மிட்டுள்ளது. இதனால் தென்னை விவசாயிகள் பயன்பெறுவதோடு மட்டுமல்லாமல் தென்னை மர மேறும் தொழிலாளர்கள், தேங்காய் உடைக்கும் கூலித் தொழிலாளர்கள் போன்றோர் பயனடைவர்.

என்றுமே விவசாயிகளின் நலன் காக்கும் தி.மு. கழக அரசு இத்திட்டத்தை கொண்டு வந்ததற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மைத் துறை அமைச்சருக்கும் தென்னை விவசாயிகள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதன் அடுத்தகட்டமாக காங்கேயம் பகுதியில் SIDCO அல்லது SIPCOT மூலமாக தென்னைக்கு நிரந்தர பொருட்காட்சி மற்றும் காட்சிப்படுத்தல் கட்டிடம் அமைக்கும்படி விரும்பிகேட்டுக்கொள்கிறேன். அத்துடன் தேங்காயின் மூலம் மதிப்புக்கூட்டிய பொருட்கள் தயாரிக்க காங்கேயம் பகுதியில் தென்னை தொழிற்சாலை பூங்கா அமைக்க அரசை கேட்டுக்கொள்வதோடு எனது நன்றியினையும் தெரிவித்து கொள்கின்றேன் என்று அயலக தமிழர் நலவாரிய தலைவர், கழக சுற்றுச் சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி தெரிவித்துள்ளார்.


சேலம் ஒருங்கிணைந்த

# மாவட்டக் கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர்கள் அறிவிப்பு!





சேலம் மேற்கு, சேலம் மத்திய, சேலம் கிழக்கு மாவட்டக் கழகங்களின் பொது உறுப்பினர்கள் கூட்டம் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என். நேரு தலைமையில் 30.05.2023 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு சேலம் 5 ரோடு, ஸ்ரீரத்தினவேல் ஜெயக்குமார் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்தக் கூட்டத்திற்கு சேலம் மேற்கு, சேலம் மத்திய, சேலம் கிழக்கு மூன்று மாவட்டங்களின் மாவட்ட கழக நிர்வாகிகள், சேலம் மாநகர கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளான இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

**பொருள்:** 1) நம் உயிரனைய கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் ஜூன் 11,12 தேதிகளில் சேலம் வருகை குறித்து , 2) முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா , 3) கழக ஆக்கப்பணிகள்

**ஆர்.இராஜேந்திரன்**
செயலாளர், சேலம்
மத்திய மாவட்ட தி.மு.க.

**எஸ்.ஆர்.சிவலிங்கம்**
செயலாளர், சேலம்
கிழக்கு மாவட்ட தி.மு.க.

**டி.எம்.செல்வகணபதி**
செயலாளர், சேலம் மேற்கு
மாவட்ட தி.மு.க.


# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

திருப்பூர், மே 24 -

திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் திருப்பூர் ராஜாராவ் வீதியில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான கலைஞர் அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் மாவட்ட அவைத் தலைவர் க.நடராஜ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் சிறப்புரையாற்றினார். இதில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாவட்ட துணை செயலாளர்கள் பொங்கலூர் ஒன்றியக்குழு பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், வழக்கறிஞர் சி.கே.நந்தினி, டிஜிட்டல் எஸ்.சேகர், மாவட்ட பொருளாளர் சு.சாமிநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் சி.கோவிந்தசாமி, எஸ்.சரவண நம்பி, பி.கே. கனகராஜு, ப.குணராஜ், கழக சட்டதிட்ட திருத்தக்குழு உறுப்பினர் இரா. சுப்பையன், கழக விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் சா.ராஜசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.விஸ்வநாதன், பி. விஸ்வ லிங்கசாமி, ந.சோமசுந்தரம், சு.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.பாலுசாமி, பொ.அசோகன், ஈ.ப.சிவப்பிரகாஷ், எஸ்.ஆர்.பழனிச்சாமி, கா.பால்ராஜ், பகுதி கழக செயலாளர்கள் கொ. ராமதாஸ், மின்னல் அ.நாகராஜ் வெ.ஜோதி, போலார் இரா.சம்பத்குமார், மு.க. உசேன், மியாமி ஆ.அய்யப்பன், மேங்கோ அ.பழனிச்சாமி, பி.முருகசாமி, கோவிந்தராஜ், எஸ்.என். குமார் செயலாளர்கள், நகர கழக செயலாளர்கள் நா.ராஜேந்திரகுமார், மூர்த்தி (எ) கிருஷ்ணசாமி, பேரூர் கழக செயலாளர் திராவிடன் வ.வசந்தகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் மு.நாச்சிமுத்து செ.உமாமகேஸ்வரி, சலீம் (எ) அப்துல்ரஹ்மான், கே. சண்முகசுந்தரம், எல்.எம். மஸ்ஊது, ஆர்.தங்கவேல், மு.ரபுதீன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா!

உலகமெல்லாம் வாழும் தமிழர்களின் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற, நம் இனத் தலைவர், குலத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழா தொடக்கம் வருகிற ஜூன் திங்கள் மூன்றாம் நாள் தொடங்க இருக்கிறது. அஞ்சுகத்தாயின் அருந்தவ புதல்வராக, ஆரூர் மண்ணின் முத்தாக, பார் போற்றும் படைப்பாளியாக, ஓய்வறியா சூரியனாக, தந்தை பெரியாரின் சீடராக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, வாழ்நாள் முழுவதும் தமிழ் மொழி காக்க, தமிழ் மக்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட தலைவர் கலைஞருக்கு பிறந்தநாள். தன் வாழ்நாளில் கழகத்திற்காக ஓய்வின்றி உழைத்த களப்போராளி, தலைவர் கலைஞர் அவருடைய நூற்றாண்டு பிறந்தநாள் விழா கொண்டாட்டங்களை, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களால் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அடிப்படையிலும், கழகத்தின் உயர்நிலை செயல் திட்டக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலும் மாவட்டம் முழுவதும் அனைத்து பகுதிகளிலும் சிறப்பான முறையில் கொண்டாடுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களால் ஏப்ரல் திங்களில் அறிவிக்கப்பட்டு, கழகத்திற்கு புதியதாக ஒரு கோடி உறுப்பினர் சேர்க்கை என்ற முடிவின் அடிப்படையில் உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 50 ஆயிரம் புதிய உறுப்பினர்கள் என்ற இலக்கை நிர்ணயித்து பணிகளை செய்து வருகிறோம். தலைமைக் கழகத்தால் நிர்ணயிக்கப் பட்டிருக்கிற காலக்கெடுவிற்குள் உறுப்பினர் சேர்க்கையை விரைந்து முடித்திடும் வகையில் மாவட்ட, மாநகர நிர்வாகிகளும், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்களும், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் முனைப்போடு செயல்பட்டு ஊராட்சி, வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள் ஒத்துழைப்போடு மே 30 ஆம் தேதிக்குள் உறுப்பினர் சேர்க்கையை முடிக்கும் வகையில் செயல்படுவது என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

தமிழர்களின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும், வீரத்தையும், பிரதிபலிக்கிற வகையில் தமிழர் திருநாளாம் தை பொங்கல் திருவிழாவில் ஆண்டு தோறும் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வருகிற ஜல்லிக்கட்டு போட்டிகளை எவ்வித தடையும் இல்லாமல் நடைபெறுவதற்கு உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் சிறப்பான வாதங்களை எடுத்து வைத்து ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு உரிமையை பெற்று தந்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கும், தமிழ்நாடு அரசுக்கும் இந்த கூட்டம் தனது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




திருப்பூர் வடக்கு மாவட்டம், திருப்பூர் மாநகராட்சி 3ம் மண்டலம், 47வது வார்டு தென்றல் நகர் முதல் அபிராமி கார்டன் வரை மாநகராட்சி நிதியில் ரூ.57.50 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை மறுசீரமைப்பு பணியினை திருப்பூர் மாநகராட்சி மேயர், வடக்கு மாநகரச் செயலாளர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் தெற்கு மாநகரச் செயலாளர் டி.கே.டி.மு.நாகரசான், மண்டலத் தலைவர் சி.கோவிந்தசாமி, துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், வட்டக் கழக செயலாளர்கள் வெங்கட்ராஜா, பத்திரன், மாமன்ற உறுப்பினர்கள் ஜெயசுதா பூபதி, வே.ராதாகிருஷ்ணன் உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

குமரி மாவட்டத்தைச் சேர்ந்த

# தேனீ வளர்ப்பாளர்க்கு தேசிய விருது!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, மே 24 -

ஒவ்வொரு வருடமும் மே 20 தினத்தன்று தேசிய தேனீ வாரியம் மூலம் சர்வதேச தேனீ தினம் கொண்டாடப்படுவதை ஒட்டி இந்த வருடம் மத்திய பிரதேசம் மாநிலம் வாரசோனி வேளாண் கல்லூரியில் பிரமாண்டமாக கொண்டாடப்பட்டது இதில் அகில இந்திய அளவில் உள்ள தேனீ வல்லுநர்கள், தேனீ வளர்ப்பவர்கள் கலந்து கொண்ட நிகழ்வில் தேனீ மற்றும் தேன் மதிப்பு கூட்டு பொருட்கள் கண்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது.

இதில் ஒரு பகுதியாக தமிழ்நாடு தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் பரிந்துரையின் மூலம் சிறந்த தேனீ வளர்ப்போர் மற்றும் சிறந்த தேனீ வளர்ப்போர் சங்கம் என இரண்டு பிரிவுகளில் தேசிய அளவிலான விருது ஒன்றிய வேளாண்மை துறை அமைச்சர் அவர்களால் உலக தேனீக்கள் தினத்தை முன்னிட்டு 20.05.2023 அன்று வழங்கப்பட்டது. இந்த விருது வழங்கும் விழாவில் குமரி மாவட்டத்தை சார்ந்த ஜி ஹனி நிறுவ னத்தின் உரிமையாளர் வே.ஜினோ அவர்களுக்கு சிறந்த தேனீ வளர்ப்பாளர் விருது மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இதில், தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடம் பெற்றது. இது தொடர்பாக நேற்று முன்தினம் (22.05.2023) தலைமைச் செயலகத்தில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர். கே. பன்னீர்செல்வம் அவர்களை சந்தித்து வாழ்த்துக்களைப் பெற்றனர்.

இந்த நிகழ்வில் வேளாண்மை உற்பத்தி ஆணையர்/அரசு செயலாளர் சி.சமயமூர்த்தி, தோட்டக்கலைத் துறை இயக்குநர் டாக்டர். ஆர். பிருந்தாதேவி, ஜி ஹனி நிறுவனர். ஜினோ மற்றும் பிரபு மற்றும் பலர் கலந்துகொண்டார்கள்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மயிலை நா. சம்பந்தன்
## மே 24 (1998)



**சென்னை மாவட்டம், மயிலைப் பகுதிக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் – மண்டலக்குழுத் தலைவர் மற்றும் மயிலை இந்து சாசுவத நிதி நிறுவனத்தில் இயக்குநராக மூன்று முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**மிசா சட்டத்தின்கீழ் சிறைவாசம் – இந்தி எதிர்ப்பு – இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**